தேயுவில் அப்பு	-	நித்திரை
தேயுவில் வாயு	-	ஆலிசம்
தேயுவில் காயம்	-	சங்கமம்
வாயுவில் வாயு	-	ஓடல்
வாயுவில் பிருதிவி	-	நடத்தல்
வாயுவில் அப்பு	-	இருத்தல்
வாயுவில் தேயு	-	தத்தல்
வாயுவிலாகாயம்	-	கிடத்தல்
ஆகாயத்திலாகாயம்	-	மோகம்
ஆகாயத்தில் பிருதிவி	-	ஆசை
ஆகாயத்தில் அப்பு	-	துவேஷம்
ஆகாயத்தில் தேயு	-	ப்யம்
ஆகாயத்தில் வாயு	-	வெட்கம்

சூக்ஷம பஞ்சீகர்ணம்

ஆகாயமும் ஆகாயமும்	-	நேத்திரம், அறிவு
ஆகாயமும் வாயும்	-	கண்டம்
ஆகாயமும் தேயுவும்	-	மார்பு
ஆகாயமும் அப்பும்	-	நாசி, பித்தம்
ஆகாயமும் பிருதிவியும்	-	இருதயம், அகங்காரம்
வாயுவும் பிருதிவியும் கூடல்	-	இருதயம், பிராணன்
வாயுவும் அப்பும்	-	குதம், அபானம்
வாயும் தேயுவும்	-	கண்டம், உதானன்
வாயுவும் வாயுவும்	-	சர்வ சரீரி, வியானன்
வாயுவும் ஆகாயமும்	-	நாபி, சமானன்
தேயுவும் ஆகாயமும்	-	செவி
தேயுவும் வாயுவும்	-	சரீரம்
தேயுவும் தேயுவும்	-	நேத்திரம்
தேயுவும் அப்பும்	-	சிங்குவை
தேயுவும் பிருதிவியும்	-	நாசி
அப்பும் ஆகாயமும்	-	சத்தம்
அப்பும் வாயுவும்	-	பரிசம்
அப்பும் தேயுவும்	-	பார்வை
அப்பும் அப்பும்	-	இரசம்
அப்பும் பிருதவியும்	-	கந்தம்
பிருதிவியும் ஆகாயமும்	-	வாக்கு
பிருதிவியும் வாயுவும்	-	பாதம்
பிருதிவியும் தேயுவும்	-	பாணி
பிருதிவியும் பிருதிவியும்	-	குதம்
பிருதிவியும் அப்பும்	-	குய்யம்

ஐவகை உற்பவம்

பிருதிவியினிடம் சராயுசமான வித்துகளாம் புல், பூடு, கொடி, செடி, மரம் முதலியவைகள்.

அப்புப் பூதம்

உற்பிஜம் பையினிடமாக மானிடம், பசு, ஆடு மிருகாதிகள்.

தேயு பூதம்

சுவேதசம், வியர்வை வெப்பத்தால் ஈ, பேன், கீடம், கம்பளிப் பூச்சி, புழு.

வாயு பூதம்

அண்டசம். முட்டையில் கோழி, வாத்து, பல்லி, ஓணான், சர்ப்பம், கோட்டான், கருடன்.

மந்திர பீசம்

ஆகசயம்; மஹான்களால் சிருஷ்டிக்கப்படும்.

அறிவுவகை

ஓரறிவுடையவை புல் மரம் செடி; இவை பரிசமறியும்.

ஈரறிவு

சிப்பி, சங்கு; இவை பரிச, ரச மறியும்.

மூவறிவு

கறையான், எறும்பு; இவை பரிச, ரச, கந்தம் அறியும்.

நாலறிவு

தும்பி, வண்டு; இவை பரிச, ரச, கந்த, ரூபம் அறியும்.

ஐயறிவு

பறவை, மிருகங்கள்; இவை சத்த, பரிச, ரூப, ரச, கந்தமறியும்.

ஆறறிவுடைய மனிதர்கள் ஞானமாகிய அறிவும் பொருந்தியவர்கள்.

பக்குவநிலை

ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலமும் நீங்கில், ஆத்துமா அருளோடு கூடிய ஞானமாகும்.

ஒரு பாதையுமின்றித் தானாயிருப்பது பிரமம்; பிரமம் மாயையாகிய அவித்தையிற் பிரதிபலித்த போது சீவன்; சீவன் அவித்தையிற் கூடியபோது சுழுத்தி; சுழுத்தி அந்தகரணத்தில் கூடில் சொப்பனம்; சொப்பனம் ஐந்து இந்திரியத்தில் கூடில், சாக்கிரம்; சாக்கிரம் 96 தத்துவங்களுடன் கூடில், விவகாரம்.

ஆச்சப்பா தேகமென்ற ஆதா ரத்தில்
அவத்தையென்ற அஞ்சையுமே சொல்லக்கேளு:
மூச்சப்பா லலாடத்திற் சாக்கிரந்தா னொன்று;
முனையான கண்டத்திற் சொப்பனந்தா னொன்னு;
நீச்சப்பா மார்பின்கீழ்ச் சுழுத்தி யொன்று;
நிசமான வுந்தியிலே துரிய மொன்று;
வீச்சப்பா விந்தின்மேல் துரியா தீதம்
விளங்கிநின்ற அவத்தையஞ்சும் கண்டு கொள்ளே.

விரசுகொண்டே ஆடுகிற சக்க ரத்தை
வினயம்கொண்டு பாராமல் வீணாய்ப் போன
பிரசைகளைக் கண்டதனா லேதுண் டப்பா?
பிலமான மூலமதில் மனத்தை வைத்தே
உரவான வாசியினால் மைந்தா மைந்தா!
ஊடாடும் சக்கரத்தை யுன்னி யாட்டத்
திரமாகச் சீவர்களைக் கதிகொண் டாடும்
தீர்க்கமுடன் கேசரியி லிருந்து பாரே.

களையான சீவகளை தீபம் போலே
கண்டதடா எண்ணெய்திரி மாண்ட போது;
களையான சீவகளை யெங்கே போச்சு?
கனலொளியின் பூரணந்தா னெங்கே போச்சு?
களையான கதலிகுலை சாயும் போது
காரணமாய் முன்போலே பின்புண் டாமே;
களையான சீவகளை பக்கத் தேதான்
கண்வெடித்த கதையாச்சுச் சீவன் காணே.

தானாகித் தான்முடிந்த சூட்சந் தன்னைத்
தரணிதனி லறியாமல் தான்தா னென்றே
ஊனாகி நின்றதிரு உடலைக் காணான்;
உடலில்நின்ற அட்சரத்தி னுறுதி காணான்
ஆணாகி நின்றதிரு வாசி காணான்:
அமர்ந்துநின்ற வாசிதிரு நயனங் காணான்
வானாகி நின்றவடி முடியுங் காணான்
மதிகெட்டு விதியிழந்து மாளு வானே.

மாளுவது மிரண்டுவிதம் மைந்தா கேளாய்:
மகத்தான சீவகளை மாறும் போது
ஆளுவது பூரணமாய் அறிவோ டய்யா!
அடங்குவது பராபரத்தே அமைப்பே யாகும்;

சூளுவது நோயுடனே பாசம் சூழ்ந்தால்
சுளுவான மதிமயங்கி அலைவான் பாராய்;
காலுநிலை யறியாமல் அலைந்து கெட்டுக்
கானலிலும் நீரினிலும் கரைந்து போமே.

ஆகையால் அந்தக்கரண வியாபாரங்கள் நீக்கி, அந்தர்முக நோக்கமாய்ப் பேச்சுக்கும் மூச்சுக்கும் மத்தி, கண்ணுக்கும் காதிற்கும் மத்தி, கங்குல் பகலாகுமிடத்திற்கு மத்தி, இரவி மதிக்கு மத்தி, அறிவிற்கும் மனத்திற்கும் நடுநிலையில் நின்றவர்க்கே மெய்ப்போதம் உதயமாகும்.

நினைவை நீக்கி நோக்கியிடின்
நிமல சொரூபத் தோன்றிவிடும்;
நினைவை மேவி நோக்கியிடி
னிலையில் உலகந் தோன்றிவிடும்;
நினைவில் உலகம் அறிந்ததுவும்
நீங்கிச் சொரூபம் அறிந்ததுவும்
நினைவி னோக்கிற் தானில்லை;
நிகழு மாயா மோகமதில்.
தன்னை மறைத்த பந்தமதைத்
தள்ளி நீங்கிற் றான்விளங்கும்;
தன்னை மறந்த தேபந்தம்;
தன்னை அறிந்த தேமுத்தி;
தன்னை விடவோர்பொருளில்லை;
தானே பிர மாயையும்பின்
தன்னை விடவே றாய்விளங்கா
தானே யாகி விளங்கிவிடும்.

கூஷண சிருஷ்டிப் பிரளயம் தின சிருஷ்டிப் பிரளயமாகின்ற நினைத்தலும் மறத்தலும் நித்திரையிலே தன்னையே மறத்தலாகின்றபடி; மரண காலம் எதிரிட்டிருப்பது இன்ன நாள் என்று தெரிந்து, அதற்குள் அடைய வேண்டும் பயனை அடையாத நமது இகபோக சுகமும் நடக்கையும் மனவிகாரமும் யாது பயன்தரும்?

ஐம்புலனை வென்றவன் வீரமே வீரம். கடவுள் ஒன்றெனத் தெளிந்த பேரறிவே அறிவு. பிறர் ஏவாமல் உண்பதே ஊண். தான் சாகாமல் கற்பதே கல்வி. ஆதலால், ஆதி சிருஷ்டி காலமுதல் யோனியாசை கொண்டு, யோனி மூலமாகவே இச்சை கொண்டபடி சென்மித்து வருகிறோம். அவ்வகை யோனி வழியாக அளவிறந்த சென்மங்கள் எடுத்தும், இப்போதாகிலும், பிறந்து விட்டேன்; 'இனிப் பிறவாதிருக்க வரந்தர வேண்டும்', எனப் பட்டினத்துச் சுவாமிகள் கேட்டபடி, இனிப் பிறவி பெறாவண்ணம் பெற வேண்டுமல்லவா? தேகம் நரை திரை மூப்புச் சாக்காடு பெற்று நசிப்பது சித்தம். தேகத்திலிருந்து சத்து எக்காலமும் நசிப்பதில்லை என்றனைவரும் புகல்வது பழமொழியாயிருந்தாலும், அது அனுபவத்தில் சித்தாந்தமாக வேண்டும்.

இப்புவி அத்திப்பழம் போலும் பேரண்டம்; அதற்குள்ளமைந்த வித்துக்கள் போல்வன சிற்றண்டங்கள். பேரண்டம் ஆயிரத்தெட்டுக் கூடியது ஒரு புவனம்; இவ்வகை கொண்ட புவனம் 2, 214 கூடியது ஒரு சாகரம்; சாகரம் ஏழு கூடியது ஒரு பதம்; இப்படி 814 பதம் கூடியதைப் பிரபஞ்சமென மேலோர் கூறினர்.

தரணி சலம்கனல் கால்தக்க வானம்
அரணிய பாறு அருந்திங் களங்கி
முரணிய தாரகை முன்னிய ஒன்பான்
பிரணவ மாகும் பெருநெறி தானே -(திருமந்திரம்)

சிவம்சக்தி நாத பிந்து சதாசிவம் திகழு மீசன்
உவந்தருள் ருத்தி ரன்மா லயனிவை யொன்றி னொன்றாம்;
பவந்தரும் அருவம் நாலின் உருவம்நல் லுபாய மொன்றாய்
நவந்தரு பேத பாக நாதனே நடிப்ப னென்பர்.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், உகாரநாத ரவி, மகார விந்து சந்திரன், ஓங்கார மகம்மேரு, சுழுமுனை ஆக அஷ்ட மூர்த்தியாயும் விளங்குபவர் கடவுளென வேதம் கூறும்.

ஆச்சுதே அறிவொன்றின் விசாரணையே
அனைத்தையுமே பார்த்திருந்தே அகண்டந் தன்னில்
கோச்சுதே குருவாய்த்தத் துவங்க ளாகிக்
கொடியதீ வினையுநல் வினையு மாகிப்
போச்சுதே பெண்ணானாய்ப் ப்ரபஞ்ச மாகிப்
புகழரிய நிற்குணநிர் மலமு மாகித்
தீச்சுதே சிவமாகிச் சீவ னாகிச்
செழுஞ்சுடரின் கதிரொளியாய்ச் சிறந்த வாறே.

நிஜானந்த போதம் என்ற இந்த நூல் முற்றிலும் ஒரே முனிவர் இயற்றிய பாடல்களின் தொகை இல்லை. திருமந்திரப் பாடல்கள் விரவி வருவது போலவே, பட்டினத்தார் பாடல்களும் அவற்றுக்கு உரிய விளக்கங்களும் விரவி வருகின்றன:-

"மேலோர் முன்குறித்த வாக்கியங்கள் உண்மையென விளங்குவனவேயாம். ஐயமின்றித் தெய்வவுருத் தியானித்தாலதுவாம்; அருவுருவைத் தியானித்தால் அட்ட மூர்த்தியுமாம்; பொய்யா இரண்டையும் தவிர்த்துத் தானாயிருந்திடில், பூரணமாம்; சீவனெதிர்ப் பொருந்துவதாயின், மையலுறு மனம் விடயத்தாசையுற்றே அதுவாய் மரண சனனமும் விளைந்தவாறே தென்றேயுணர்ந்து, மெய்யறிவே தானாகப் பாவித்தால் அதுவாய் விளங்குவார் யாவரும்; சனியா வீட்டையு மெய்துவாரே.

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயனின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

வாரசரம்

ஞாயிறு, செவ்வாய், சனி வலநாசியில் சூரிய கலையாகவும்; வெள்ளி, திங்கள், புதன் இடநாசியில் சந்திர கலையாகவும்; பூர்வ பக்ஷ குருவாரம் சந்திரகலையும், அமரபக்ஷ குருவாரம் சூரிய கலையுமாகவும்; காலை 4 மணிக்கு நடக்க வேண்டும். அவ்விதம் நடந்தால், தன் காரியங்களனைத்தும் சித்தியாகும். அவ்வகை நடவாமல், பேதமாய்ச் சூரியன் நடக்க வேண்டிய தினம் சந்திரனும், சந்திரன் நடக்க வேண்டிய தினம் சூரியனுமாய் நடந்தால், அடியிற் காணும் பலனாக நடக்கும்.

ஞாயிறு சந்திரன் -சளி இருமல்; திங்கள் சூரியன் - சலதோஷம், சுற்றத்தார்க்குக் கேடு; செவ்வாய்-சந்திரன் - சுரம் சட்டை சாவு; புதன் சூரியன் - நீரேற்றம், தலைக்குத்தல் தீங்கு; வளர்பிறை வியாழன் சந்திரன் - தேக நோய்; வெள்ளி சூரியன் - கண், காது நோய், வெளியூர்ப் பிரயாணம்; சனி சந்திரன் - சீதள சன்னியாகும்.

சந்திர சூரியன் இரு கலையினும் ஐம்பூதம் நடப்பதுண்டு. பிருதிவி நிறம் பொன்மை, தித்திப்பு; அப்பு வெண்மை, துவர்ப்பு; தேயு செம்மை, உவர்ப்பு; வாயு கருமை, புளிப்பு; ஆகாயம் படிகம்,கசப்பு; பூர்வ பக்ஷத்தில் குரு பிருதிவி; சுக்கிரன் அப்பு; குரு தேயு; புதன் வாயு; சனி ஆகாய பூதியமாகக் கொள்க.

ஞாயிறு ஆந்தையாகிய அப்பும், திங்கள் செவ்வாய் வியாழன் காசமாகிய தேயுவும், புதன் வல்லூறாகிய பிருதிவியும், வெள்ளி கோழியாகிய வாயுவும், சனி மயிலாகிய ஆகாயமும் பூதியமாக நடக்க மிக உத்தமம்.

பூதியங்கள் பிருதிவி அப்பு நடந்தால் சத்வ குணம்; தேயு ராட்சதமாகிய கோபமாங்காரம் பெண்ணிச்சை; வாயு அலைவுறும்; ஆகாயம் பர இச்சையை நாடும்.

காலை படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போதே சுவாசத்தை உள்ளிழுத்துக்கொண்டு எழுந்திருக்க வேண்டும்.

ஆகவேண்டிய காரியங்களுக்குப் போகும்போது இரவியில் பிருதிவி அப்பு நடக்க சென்றால், தாமதத்தில் பலன் சித்திக்கும்.

படுக்கும்போது இடக்கையை கீழ்வைத்து வலக்கையை மேலாக வைத்துக் கால்நீட்டிப் படுக்க வேண்டும். அவ்வகையில் படுக்கும் போது மனத்தைப் பலவாறு சிந்தனையில் செல்லவிடாமல், சுவாசமீது செலுத்தியிருக்க வேண்டும். அவ்வகை அப்பியாசம் செய்துவருகையில் சொப்பனாதி அவஸ்தைகள் நீங்கி, அந்தமுக விவகாரங்கள் விளங்கும். இவ்வகை நடப்பதுமின்றி, வயிற்றில் ஆகாரமில்லா மலிருக்கும்படி பசி அதிகமாயிருப்பதென்று சொல்வது; அப்போது மேற்கூறியபடி படுத்திருந்து பார்க்கப் பசி எழும்பிய பரமிடம் நன்றாகத் தோன்றும்.

அமாவாசைத் தினக் காலை இரவியை இராகுவும், பருவத்தின் சந்திரனைக் கேதுவும் மறைப்பதுபோல, நமது இரவு மதியை இராகு கேது சாயை மறைப்பதால், மனத்தை இருளாகிய மாயை மூடியது.

சந்திரன் மனத்திடமும் சூரியன் நேத்திரத்திலுமிருப்பதால் இரவியிடம் மதியைச் செலுத்த, மதிக்குக் கிரணங்கள் குறைவுபடாமல், அறிவு உதயமாகும்.

ஆகாயமும் வாயுவும் கலந்திருக்கின்றன. மண்ணும் சலமும் கலந்திருக்கின்றன. அக்கினி மத்தியமாக நின்றது. மாமிச உதிர சலம் ஒன்றாயிருக்கிறது; சரமாகிய வாயு ஆகாய வெளியில் சம்பந்தமாயிருக்கிறது. அக்கினி பொதுநிலையாய் நின்றது.

தானென்ற சித்தர்முதல் முனிவர் ரிடிகள்
தன்மயமே தானாகத் தவமே செய்து
ஊனென்ற உடல்வெறுத்துப் பசிய டக்கி
உதித்தகலை வாசியென்ற தார கத்தால்
வானென்ற ஆகாச வெளியில் சென்று
மகத்தான சோதியுடன் சோதி யானார்;
ஏனென்று வந்ததுவும் சோதி சோதி
எங்கும்சிவ மயமான சோதி தானே.

சோதியென்ற சோதியிலே சோதி யானார்
சூழ்ந்ததடா அண்டமதில் நன்றாய்ப் பாரு;
ஓதியதோர் மந்த்ரகலை சோதி யெல்லாம்
ஒளிவிளக்காய் நின்றதடா அங்கே பாரு;
நீதியுடன் பார்க்கையிலே அண்டந் தன்னில்
நிறைந்துநின்ற நட்சத்ர சோதி யெல்லாம்
ஆதியென்ற நாதாக்கள் காந்தி காந்தி
அண்டமதில் சூழ்ந்ததடா அங்கே பாரே.

ஸ்தூல தேகம் சத்தி, சந்திரராம்; இதில் உயிர்ப்பாகிய உயிர் சூரியர் சிவமாகும்; பிருதிவி குரு நாசியிடமாக வாசனையறிதலும், அப்பு சுக்கிரர் நாவிடம் சுவையறிதலும், தேயு அங்காரகர் நேத்திரமிடம் ரூபமறிதலும், வாயு புதன் சரீரத்தில் பரிசமறிதலும், ஆகாயம் சனி செவியினிடம் ஆகாய சத்தமறிதலுமாகும். இராகு கேது சாயையென்றும், அவை குதம் குய்யம் இத்தானமிடமிருப்பன வென்றும் வேதம் புகலும்.

கடினமென்று தள்ளாதே வாசி யோகம்
கண்மூக்கு மத்தியே கருதிப் பாரு;
துடிமிகுந்த சுழுமுனையி னூடு தொக்குச்
சூரியனும் சந்திரனும் ஒன்றாய்ப் போகும்;
குடியிருப்புச் சாக்கிரத்தின் கோட்டை யாச்சு;
கோடானு கோடியுகம் வாழ லாச்சு;
நொடி இமைக்கும் நேரமல்லோ பிரமன் வாழ்க்கை
நுண்ணிமையாய்ப் பார்த்தறிந்து நுடங்கு வாயே.

சாக்கிர பகிர்முக விவகாரங்களிலிருந்து நித்திரை சொப்பனத்தில் அநேக விஷயங்களைக் கண்டதாயும், செய்ததாயும், சென்றதாயும், நடத்தியதாயும் அனேகமாய்க் காண்கிறோம். நித்திரை நீங்கிய பிறகு யாதொரு பயனையும் அடையாதவர்களாகின்றோம். அவைகளின்றி, ஒரு பெண்ணைக் கூடிச் சம்போகம் செய்ததாகக் காண்கின்றோம். அப்படிக் கண்டு நித்திரை நீங்கிய பிறகு ஸ்கலிதமான விந்தைப் பிரத்தியக்ஷமாகக் காண்கின்றோம்.

இதைப் புத்திமான்கள் அறிவு முன்னிலையில் யூகமாய் யோசிக்க, விந்தின் செயலும் பெருமையும் அறிந்து, அதில் தேறும் அனுபவ சித்தாந்த நிலையில் சதா ஆனந்த பரவசராய் விளங்குவர்; இது வேத சம்மதமாகவிருக்கும்.

மாயாள் வசத்தே சென்றிவர் வேண்டிடில்
ஓயா இருபக்கத் துள்வளர் பக்கத்துள்
ஏயாவெண் ணாளின்ப மேற்பனி மூன்றிரண்
டாயா அபரத்து ளாதிநாள் ஆறாமே

ஆறைந்து பன்னொன்று மன்றிச் சகமார்க்கம்
வேறன்பு வேண்டுவோர் பூவரிற் பின்னிந்தோ
டேறும் இருபத் தொருநா ளிடைத்தோங்கும்
ஆறின் மிகுத்தோங்கும் அக்காலம் செய்யவே

செய்யும் அளவில் திருநான் முகூர்த்தமே
எய்யுங் கலைகாலம் இந்து பருதிகால்
நையு மிடத்தோடி னன்காம நூல்நெறி
செய்க வலமிடந் தீர்ந்து விடுக்கவே

கலக்குநாள் முன்னாள் தன்னிடைக் காதல்
நலத்தக வேண்டிலந் நாரி யுதரக்
கலத்தின் மலத்தைத்தண் சீதத்தைப் பித்தை
விலக்கு வனசெய்து மேலணை வீரே

விழுந்தது லிங்கம்; விரிந்தது யோனி;
ஒழிந்த முதலைந்து மீரைந்தொ டேறிப்
பொழிந்த புனல்பூதம்; போற்றுங் கரணம்
ஒழிந்த நுதலுச்சி யுள்ளே யொளித்தே

மாத ரிடத்தே செலுத்தினு மவ்விந்து
காதலி னால்விடார் யோகங் கலந்தவர்
மாத ருயிராசை கைகொண்டே வாடுவர்
காதலர் போன்றங்ஙன் காதலாஞ் சாற்றிலே

மூலாக்கினி, பசித் தீபாக்கினி, கோபாக்கினி, ஸ்திரி தாபாக்கினி, யோக ஞானாக்கினி என்னும் இவற்றுள் ஆதியு மந்தமும் தவிர மற்ற மூன்று அக்கினியும் உற்பவமாய்த் தோன்றலை யாவரும் சரீரத்தில் கண்டிருக்கிறோம்.

உரமடி மேதினி யுந்தியி லப்பாம்;
விரவிய தன்முலை மேவிய கீழங்கி
கருமுலை மீமிசை கைக்கீழிற் கால்ாம்;
விரவிய கந்தர மேல்வெளி யாமே

சத்தமுஞ் சத்த மனமும் மனக்கருத்
தொத்தறி கின்ற விடமும் அறிகிலர்
மெய்த்தறி கின்ற விடமறி வாளர்க்கு
அத்த னிருப்பிடம் அவ்விடந் தானே

அங்கி மதிகூட வாகும் கதிரொளி;
அங்கி கதிர்கூட வாகும் மதியொளி;
அங்கி சசிகதிர் கூடவத் தாரகை
தங்கி யதுவே சகலமு மாமே

பத்து மிரண்டும் பகலோ னுயர்கலை
பத்தினொ டாறு முயர்கலை பான்மதி
ஒத்தநல் லங்கிய தெட்டெட் டுயர்கலை
அத்திற னின்றமை யாய்ந்துகொள் வீரே

மேலாம் பதத்தையளிக்கும் பூரண அக்கினியை நாம் கேவல விடயங்களிற் செலவிட்டு, வாழ்நாட்களைக் கேவலப்படுத்து கின்றோம். அவ்வகை செய்யினும், அதனால் அனேக வியாதி அனுபவிக்க நேரிடுகின்றது.

"உண்ணும்போ துயிரெழுத்தா லுயிரை வாங்கி, உறங்குகின்ற போதெல்லா மது போலாகும். பெண்ணின்பா விந்திரியம் விடும்போ தப்பா! பேணியுயிர் மேல்வாங்கு" என்று மேலோர் செப்பியதை நாம் ஏன் அனுபவத்தில் கொண்டுவரக் கூடாது?

விந்து அதிகமாய்ச் செலவழிப்பதில் பிணி மூப்புச் சாக்காடு எளிதிலடையக் கூடும். ஆகாரத்திற் பிரிந்த அன்ன ரசமானது, உதிரமாய், 7 ஆம் நாள் சுக்கிலமாகின்றதை விரயம் செய்யாமல், மாதத்தில் இரண்டு தரம் ஸ்திரீ பூர்வ காலத்தில் பயன்படுத்தும் தினம் சையோகிப்பதில் அவ்விதம் தரிக்கும் கருச்சிசுவானது, ஆயுள் விர்த்தியும் தேக திடமும் பெற்றுப் பிணியில்லாமலும் இருக்கும்.

உந்தியிலிருக்கும் உதான வாயுவினால் காமம் கண்ட ஸ்தானக் குழியிடமிருந்து, சமான வாயுவானது கமலப்பிறை சொலிக்கும் ஸ்தானமடையுமாகில், கபால சூலையாடி, அசதி, வயிற்றிரைச்சல், பேதி, நாவுலரல் முதலிய வியாதி புருடருக்கும், ஸ்திரீக்கு வயிற்று நோய், தேக வெளுப்பு, சூதக வாய்வு முதலியவும் நேரும்.

ஓமென்ற மூலகண பதியே காப்பு
உண்மையுடன் நடுமனையி லுகந்து நின்றே
ஆமென்ற அமுர்தகலை யுள்கொண் டேதான்
அடங்கவந்த மனோமணியின் கிருபை யாலே
ஊமென்ற வுண்மைதனை மவுன மாக
உருப்பெற்றுக் கருப்பெற்றே யுறுதி பெறற்றுத்
தாமென்ற மதிதனையே ரவியில் தாக்கச்
சச்சிதா னந்தமென்ற ஆதி காப்பாம்.

புருவமென்ற சுழுமுனையிலே மைந்தா கேளு
போதமென்ற அருள்ஞானச் செந்திப் பற்றித்
திருவிருந்த மாளிகையில் தீபங் காணும்
செங்கமலக் கண்ணாலே நன்றாய்ப் பாரு;
குருவிருந்த இருதயமாம் முக்கோ ணத்தில்
குவிந்துமனக் கண்ணாலே தன்னைப் பார்த்தால்
கருவிருந்த பதியதுதான் மைந்தா மைந்தா!
கண்காணத் தோன்றுமடா கருவைப் பாரே.

விண்ணைப்பார் தன்னைப்பார் மண்ணைப் பாரு;
மேன்மைபெறு குருவருளை மேவிப் பாரு;
பெண்ணைப்பார்த் தலையாதே; பெண்தான் தேகம்
பிரியமுடன் தேகமதைப் பேணிப் பார்த்தால்
கண்ணப்பா துலங்குமடா! அந்தக் கண்ணால்
காணலாஞ் சித்துவெகு கண்ணில் காணும்;
மண்ணப்பா என்றசடந் தன்னைப் பேணா
மாந்தருக்கு மென்னவரும் மண்தா னாமே.

புரண்டுமனம் நிலையாத பித்த ருண்டு;
பிராணநிலை யறியாத மூட ருண்டு;
முரண்டுடனே முரடுகட்டி வளையா ருண்டு;
மோகமென்ற மாய்கையில் திரிவா ருண்டு;
திரண்டகோள் முனிநுனியை அறியா ருண்டு;
செகத்திலிப் படியதிகஞ் செப்பப் போமா?
அருண்டகண்ணு மிருண்டகண்ணும் அறியாப் பாவி
அடக்கமென்ற காவியத்தை அறிந்து பாரே.

தன்னிலையைத் தானறியா மூடல் காணும்
சாக்கிரத்தின் பயனறியாச் சண்டி மாடு;
கண்ணறிந்து விண்ணொளியைக் கருதிப் பார்க்கக்
கருத்துடனே வாசிநிலை காலைக் காணா;

எண்ணிறைந்த அட்சரத்தி னிய்ல்பு காணார்;
எட்டிரண்டு மறியாமல் ஏக மென்பார்;
விண்ணிறைந்த ஏகபரா பரந்தான் மைந்தா!
மெய்ஞ்ஞான மானதிரு விளக்குத் தானே.

மகான்கள் வாக்கிய அனுபவத்தைப் பெறாமல் வாய் மதமாய்ப் பேசினவர்கள் பெருங்குடலும் சிறுகுடலும் புரண்டு மகா துன்பமடைவார்கள். மகான்களைத் தரிசிக்கவேண்டி அந்தர்முகமாய் அடியிற்கண்டபடி தியானிக்க, அவர்கள் பிரத்தியக்ஷமாய்த் திருவருள் பாலிப்பார்கள்.

செய்ததமிழ் தனையறிந்து பதினென் பேரைச்
செம்மையுடன் காண்பதற்கு மூலங் கேளு;
சைதன்ய மானதொரு தன்னைப் போற்றிச்
சதாகாலம் ஓம்கிங்ரங் அங்சிங் கென்று
மெய்தவறாப் பூரணமா யுருவே செய்தால்
வேதாந்தச் சித்தரைத்தான் வயமாய்க் காண்பாய்;
உய்தமுடன் அவர்களைத்தான் வயமாய்க் கண்டால்
உத்தமனே! சகலசித்துக் குதவி யாமே.

இதன் பின்னர் மாணவர்களுக்குப் புரியக்கூடிய விதத்தில் புரியட்டும், ஐந்தெழுத்து, பிரணவ நுட்பம் முதலிய சித்தர் இலக்கிய இரகசியங்கள் எடுத்தோதப் பெறுகின்றன:-

புரியட்டமாவன

சடம், பிரமன் கூறு; உதிரம், மாலின் கூறு; இதில் சூட்சமமாவன: சிகரம் தீ, சிவன்; வகரம் காற்று, மகேசன்; யகரம் ஆகாயம் சதாசிவம்; விந்துநாதம், சத்தி, சிவன், விராட்டு, பரை ஆக 8. இதன் மீது வெளிபாழ், ஒளிபாழ், வெளியொளிபாழ், இவைகள் கடந்து, உள் மனையாளிடமென்றும் அவ்விடமிருப்பவர் சிவயோகிகளென்றும் மறை கூறும். இவ்வனுபவம் பெறுவது, தக்க ஆசான் கிடைத்து, அவரது சாயைபோல அவருடனிருந்து, சதா அவரால் பெற்ற திருவருள் நோக்கத்தில் நெடுங்காலமிருப்பவர்களுக்கு அமையும் பதமாகும். ஆகிலும் அனைத்திற்கும் மனமே முன்னிலைக் காரணமாயிருக்கிறது. மனம் அலைவுறா திருக்க வேண்டும். மனமானது எப்போதும் ஒன்றை நாடியே நிற்கும். அசைவற்று நிற்கும் சுபாவம் அதற்கில்லை. நன்மார்க்கத்திலேனும் துன்மார்க்கத்திலேனும் செல்லுவது மனமாயிருக்கிறது. மனத்தலைவை நிறுத்துவதே நல்லோர் கடமை. அவ்வையார் குறளில் இதன் தொடர்பானவை வருமாறு:-

தருமம் பொருள் காமம் வீடெனும் நான்கும்
உருவத்தா லாய பயன்
ஈச னெனக்கருதி யெல்லா வுயிர்களையும்
நேசத்தால் நீநினைந்து கொள்.

மெய்ப்பால் அறியாத மூடர்தம் நெஞ்சத்தின்
அப்பாலே நிற்குஞ் சிவம்.
உடம்பினாற் பெற்ற பயனாவ தெல்லாம்
திடம்பட ஈசனைத் தேடு.
தன்னை யறியு மறிவு தனைப்பெறில்
பின்னைப் பிறப்பில்லை வீடு.
எண்ணிறந்த யோனி பலவாய்ப் பரிந்தெங்கும்
உண்ணிறைந்து நிற்குஞ் சிவம்.
விண்ணிறைந்து நின்ற சுடர் போலச் சீவர்கள்
கண்ணிறைந்து நிற்குஞ் சிவம்.
நினைப்பும் மறப்புமில் லாதவர் நெஞ்சந்
தனைப்பிரி யாது சிவம்.
உந்தி முதலாகி ஓங்காரத் துட்பொருளாய்
நின்றது நாடி நிலை.
உந்தியினுள்ளே ஒருங்கச் சுடர்பாய்ச்சில்
அந்தி யழலுருவ மாம்.
நாபி யகத்தே நலனுற நோக்கிடில்
சாவது மில்லை யுடம்பு
ஆவிபாழ் போகா தடக்கி யிருந்தபின்
ஓவிய மாகு முடம்பு.
மயிர்க்கால் வழியெல்லாம் மாய்கின்ற வாயு
உயிர்ப்பின்றி யுள்ளே பதி.
மூலத்திற் றோன்றி முடிவிலரு நான்காகிக்
கால்வெளியிற் பன்னிரண்டாங் கண்.
வாசலீ ரைந்து மயங்கிய வாயுவை
ஈசன்றன் வாசலி லேற்று.
சத்தியாஞ் சந்திரனைச் செங்கதிரோ னூடுருவில்
முத்திக்கு மூலம் அது.
வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்
ஆயுட் பெருக்கமுண் டாம்.
அசபை யறிந்துள்ளே அழலெழ நோக்கில்
இசையாது மண்ணிற் பிறப்பு.
ஓசையி னுள்ளே உதிக்கின்ற தொன்றுண்டு
வாசமலர் நாற்றம்போல் வந்து.
துரியங் கடந்த சுடரொளியைக் கண்டால்
மரணம் பிறப்பில்லை வீடு.
அடைத்திட்ட வாசலின் மேல்மனம் வைத்துப்
படைத்தவன் தன்னையே பார்.

எழுஞ்சுட ருச்சியின் மேல் மனம் வைக்கத்
தொழிலொன் றிலாத சுடர்.
கண்ணகத்தே நின்று களிதருமே காணுங்கால்
உன்னகத்தே நின்ற வொளி.
பேசு மெழுத்துடன் பேசா எழுத்துறில்
ஆசான் பரநந்தி யாம்
நின்ற எழுத்துடன் நில்லா எழுத்தினை
ஒன்றுவிக்கி லொன்றே யுளது.
கூடக மான குறியெழுத்தைத் தானறியில்
வீடக மாகும் விரைந்து.
பிறந்திட மாலிடம் பேரா திருப்பின்
இறந்திடம் வன்னி யிடல்.
மயிர்முனையிற் பாதி மனத்தறி வுண்டேல்
அயிர்ப்புண்டங் காதி நிலை.
நினைப்பும் மறப்பும் நெடும்பசியும் அற்றால்
அனைத்துலகும் வீடாம் அது.
மறவா நினையா மவுனத் திருக்கில்
பிறவா றிறவார் பிணை.
சூரியன் வன்னியொன் றாகிடிற் சோமனாம்
பாருமின் ஈது பயன்.
மதியொரு வன்னியொன் றாகவே வந்தால்
கதிரவ னாமென்று காண்.

ஓசையில் சத்தம், முட்டையில் உயிர்ப்பு, வித்தில் சத்தாகிய முளை, பூவில் வாசம், பழத்தில் சுவை, இரும்புண்ட நீரைப் பிரித்துக்காட்ட இயலாமை போல நிறைந்த எள்ளிலெண்ணெய், பாலில் நெய், கரும்பிற் சர்க்கரை, தேயுவில் அக்கினி, சொல் முடிவில் பொருள் தோன்றல் போல அகநோக்குடையவர் காண்பர். நால்வகைத் தோற்றத்தில் மானிடமென்னும் வடிவங்கொண்டும் மேற்கண்ட அனுபவங்களை அடையாமல், உலகம் மெச்சச் சரீர மீது பல வேடங்களைத் தரித்து, 'நான் யோகி; பரதேசி; தம்பிரான்; சாமி; தவசி; தாசன்; பக்தன்' என்று வீண் காலங்களைப் போக்குவதனால் அருமையான பிறவி வீணாகிப் பிருதிவியில் இலயமாய் விடும்; 'தான் தான் என்பது யாது? அதைச் சூழ்ந்த கருவி கரணாதிகள் எவ்வாறுதித்து எவ்வாறொடுங்கும்?' எனச் சித்தாந்தமுற்று நிற்பதே எம்மதச் சார்பினரும் பெறும் நிலையாகும்.

திருவருள் போகத்தை யளித்து, சென்ன மரணத் துயரத்தை நீக்கி, துரியாதீத நிலையிலிருந்தும் குருவிற்கு உடல் பொருளாவியெனும் மூன்றையும் (சரீரத்தையும், உயிர்ப்பையும், அறிவையும்) தத்தம் செய்த மாணாக்கருள் மந்த, மந்ததர, தீவிர, அதிதீவிர பக்குவத் திறங்கள் நான்கு விதமாயிருக்கின்றன. அவருள்ளும் பிரம

சரியம், கிருகஸ்தம், சந்நியாசம், வானப்பிரஸ்தம், அதிவர்ணாசிரமம் பெற்றவர்களாயுமிருக்கின்றனர்.

இருக்கு, எசுர், சாம, அதர்வணமாகிய நான்கு வேதத்தில் இருக்கும் ஞானகாண்டத்துள், தைத்திரிய உபநிஷத்தில், பிரக்கியான பிரமமெனும் குருவாக்கியம், அறிவே பிரமம் என்பது. எசுர் வேத தயித்திரிய உபநிஷத்தில் 'அகம் பிரமா அஸ்மி' என்பது 'நானே பிரமம்' என்பது. சாம வேத ஞானகாண்டத்துள் சாந்தோக்கிய உபநிஷத்தில், தத் துவம் அசி எனும் வாக்கியம் 'நீயானாய்'. அதவர்வண வேத ஞானகண்டத்து மாண்டோக்கிய உபநிஷத்தில் 'என்னுடைய ஆத்துமாவே பிரமமாய் விளங்குகின்றது'. இவ்வனுபவம் குரு கடாக்ஷத்தால் சுபாவனுபவமாக வேண்டும்.

பஞ்சாக்ஷரம்

நகரம், அருட்சத்தி தேகத்தைத் தரும்; பிராரத்துவத்தை அனுபவிப்பது, மகரம்; ஆணவமலம், அசுத்த மாயை; சிகரம், சிவம்; வகரம், அருள்; சகரம், சீவன். ஆதலால், மகா அசுத்த மாயை நீங்கில், அருட்சத்திச் செய்கையான நகரச் செய்கையொடுங்கும். பிறகு யகர சீவன் வகர அருளால் சிவத்தையடையுமெனவும், நகரமாகிய சேரியை நஞ்சென வெறுத்து மகரமாகிய மயலெல்லாம் வேரறக் களைந்து, வகரமாகிய வனத்தினி லிருந்திளைப்பாற, சிகரமாகிய சிவகதியடைந்தனன் சீவனென்பது அனுபவிகள் வாக்கியம். ஆகையால், நகர மகாரத்தை நீக்கி மற்ற மூன்று அட்சரங்களை இருதலை மாணிக்கமாகத் தியானிக்கின்றனர். இவை ஆகம விதிப்படி கூறியவாயிருக்கின்றன.

பிரணவ பஞ்சாக்ஷர விவரம்

கணபதி, நாசி சுவாச முன்னிலையில் நான்கு வித பேதங்களை யறியும்; அப்பேதங்கள் அறிவது, இடைகலை பிங்கலையும் சுழுமுனையில் கூடில் நீங்கும். ஓங்கார சித்தி, பிரமன். நாவு பிருதிவியில் ஆறு விதச் சுவைகளறியும். அறிவது நீங்கில், நகாரம் சித்தி; நேத்திரம் சலம் அப்பு பத்துவித பேதங்களாகிய பஞ்சவர்ணம் உயரம் குள்ளம் சிறுத்தல் பெருத்தலாமென அறிவது நீங்கில் மகார சித்தியாகும்.

சர்மம்

தீ தேயு இவை முன்னிலையில் சூடு குளிர்ச்சி மிருது கடினமென அறியும் பரிச பேதம் பன்னிரண்டும் அறிவது நீங்கில் சிகர சித்தியாகும்.

செவி வாயு ஆகாய அம்சம்

பதினாறுவித அக்ஷர பேதங்களை அறிவது நீங்கில், வகரம் சித்தி யாகும்.

புருவமத்தி ஆகாயம்

அவ்விடம் விருப்பும் வெறுப்புமறியும் இரண்டு தன்மை நீங்கில், யகார மனம் சித்தியாகும். இவ்வகை சத்த, பரிச, ரூப, கந்தங்களறியும் மனம் அசைவற, அம்பலமாகிய குழியில் சங்கல்பமிலாததாகிய அறிவு சுயம்பிரகாசமாய் விளங்குமெனத் தவத்தினர் செப்பியிருக்கின்றனர். இதை ஐம்பத்தொரு அட்சரமென்று புகல்வர்.

ஆகருஷ்ணம் தம்பனம் நகரம். மோகனம் மகரம். பேதன மாரணம் சிகரம். வித்வேஷணம் உச்சாடனம் வகரம். வசியம் யகரமாகும்.

நகரம் ஆண் என்றும் அதற்கு மூன்றாவது சிகரம் பெண்ணென்றும், ஆண் எழுத்தைச் சுற்றிப் பெண்ணெழுத்து இருக்க. அவ்வகையாக ஒவ்வோர் எழுத்திற்கும் மூன்றாவது எழுத்துப் பெண்ணெழுத்தாகச் சக்கரங்களிலடைகின்றன.

பன்னிரண்டு காலான புரவி யப்பா
பாங்கான மூலவெளி தன்னில் நிற்கும்;
நன்னயமாய் வாசிதனி லேறிக் கொண்டு
நாட்டியந்த நடுவீதி தன்னில் நின்றால்
முன்னின்ற முப்பாழுக் கப்பா லேயோர்
முகப்புண்டு முச்சந்தி வந்து கூடும்;
சின்னஞ்சிறு வாசல்கடந் தப்பாற் சென்றாற்
சிதம்பரமும் காணமுத்தி சித்தியாமே.

பிரணவமென்னும் ஓங்காரத்தில் அகார சோதி பிந்து உதித்து, இதில் நகரமகரமுதித்து, அகார வொலியால் நாதமுமுதித்து, இதில் சிகர வகரமுதித்து, மகரத்தில் யகர ஆன்மா தோன்றியதெனவும், நகரம், திரை; மகரம், மால்; சிகரம், பதி; வகரம், திரை; யகரம் சீவாக்ஷரமாய் விளங்கும். ஏகாக்ஷரம் திரியாக்ஷரம், பஞ்சாக்ஷரம், சடாக்ஷர அஷ்டாக்ஷரமாகச் சிந்திப்பதெல்லாம் பகிர்முக நோக்குடையதாயிருக்கிறது. அக்ஷரமானது அச்சரமாம் எனக் கூறுவதில் சரம் பார்ப்போன் பரம் பார்க்கக்கூடும்.

அகாரமான நேத்திரத்தில் மனோன்மணியென்னும் மனமானது அறிவு சதாசிவமாயிலங்கும். அறிவு என்பதில் அகாரம் சூரியகலையாகவும், உகாரம் சந்திரகலையாகவும், றிகாரம் சுழுமுனையாகவுமிருக்கின்றன. இம்மூன்றுங் கூடியது அறிவு. இவ்வகையுடையவர் அறிவுடையவர். சிங்கார இடை பிங்கலை சங்கார வழி போகாமல் பொங்க நிறுத்தி எங்கள் குருராயன் பாதம் போற்றும்படி முத்துத் தாண்டவ சுவாமிகள் செப்பினர். இச்சா பிராரத்துவம், அனிச்சா பிராரத்துவம், பரஇச்சா பிராரத்துவம் ஆக அனுபவித்து வருவதில், இவனது செயலால் யாதொரு விவகாரத்தையும் நடத்தாமல், யாவும் கடவுள் செயலாக முடியவேண்டுமென நிச்சயமுடையவரானால் அவர் அடிமைத்திறமாக ஆட்கொள்ளக் கூடும்.